1981 ஜனவரி 30]

வந்திருக்கிறதா? அப்படிப்பட்ட அவல நிலையைப் போக்குவதற்கு பொது உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒன்றை ஆங்காங்கே போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசு யோசிக்கும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இன்னும் 6,000 வழக்குகள் இருப்பதாகச் சொன்னார்கள், மாநிலம் பூராவிலும். அதோடுகூட புதிய சட்டங்கள் இயற்றப்பட்டு, அமுல்படுத்துகிற பொறுப்பும் தாசில்தார்களுக்கு இருக்கிறது. புதிய, புதிய பென்ஷன் ஸ்கிம்களை அமுல்படுத்தும் பொறுப்பும் தாசில்தார் களுக்கு இருக்கிறது. அதற்குமேல் அமைச்சர்கள் 'டூர்' செய்யும் போது அவர்களுக்கு 'வெயிட் ஆன் தி மினிஸ்டர்ஸ்' என்ற முறை யில் 'அடிஷனல் ரெஸ்பான்சிபிலிட்டி' இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான பொறுப்புகளைக் குறைத்து, வழக்குகளை துரித மாக பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தாசில்தார்களுக்கு வேலை அதிகமாக இருந்தால், அதற்கு தகுந்த படி துணை தாசில்தார்களையும் மற்றுமுள்ள அலுவலர்களையும் அரசு நியமிக்கிறது. அவர்கள் எங்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லவில்லை. அவர்களால் எவ்வளவு செய்ய முடியும் என்று அரசு யோசிக்கிறது. அதுமட்டுமல்ல; இந்த 6000 மனுக்களும் ஒரே இடத்தில் இல்லை; 156 தாலுகாக்களில் இருக்கின்றன. சில தாலுகாக்களில் மிகக் குறைவாகத்தான் இருக்கின்றன. ஏதாவது குறிப்பிட்ட ஒன்றிரண்டு தாலுகாக்களில் அதிகமாக இருந்தால், அதுபற்றி அரசு யோசிக்கும்.

தண்ணீர்த் தீர்வை விதிப்பு.

*வினா எண் 105—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்ணீர்த் தீர்வை விகிதங்களை சீரமைப்பது பற்றி வருவாய் வாரிய உறுப்பினரைக் கொண்ட ஒரு நபர் கமிட்டி சிபாரிசு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) குழுவின் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

பாலிடெக்னிக்குகளில் சிப்டு முறை.

*வினா எண் 106 —திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

[1981 ஜனவரி 30

தமிழகத்திலுள்ள பாலிடெக்னிக்குகளில் ''சிப்டு'' முறையை அமுல்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இல்லை.

[முற்பகல் 9—30]

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டில் பாலிடெக்னிக்குகளில் உள்ள மொத்த இடங்கள் எத்தனை, கடந்த ஆண்டு வந்த விண்ணப்பங்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு தொழில் நுட்ப பயிலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட சேர்ப்புத் திறன் 1,608 ஆகும். 9 தொழில் நுட்பப் பயிலகங்களிலும் சேர்க்கும் திறனை 120-லிருந்து 180 ஆக அதிகரித்தும் மற்ற தொழில் நுட்பப் பயிலகங்களில் அனுமதிக்கப் பட்ட இடங்களை விட 10 சதவீதம் அதிகமாக அனுமதிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேல்நிலைக் கல்வியில் தேறியவர்களை இரண்டாம் ஆண்டில் சேர்க்கவும் 10 சதவீத இடம் ஒதுக்கீடு இவ்வாண்டு செய்யப்பட்டுள்ளது. பகுதி நேர தொழில் நுட்பப் பயிலகங்களிலும் சேர்ப்புத் திறன் உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சின்னராஜ் : பேரவைத் தலைவரவர்களே, அரசாங்க உத்தியோகம் தேவையில்லை என்ற உத்தரவாதம் கொடுத்து பயிற்சி பெறுவதற்கான கட்டணத்தையும் செலுத்த முன் வருகிறவர்களுக்கு தொழில் கல்வியைக் கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்கின்ற வகையில் திட்டம் வகுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பாலிடெக்னிக்குகளில் ஷிப்ட் முறை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் தொழில் நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில் தற்போது மாணவர்கள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் புதிதாக பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன். அப்படி ஏற்படுத்துவதாக இருந்தால் மதுரை மாவட்டத்தில் தேனி பகுதியில் அவ்வாறு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புதிதாகப் பாலிடெக்னிக் ஆரம்பிக்கவேண்டும் என்ற அடிப்படை யிலேதான் இந்த ஆண்டு 5 பாலிடெக்னிக்குகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன தனியார் துறையிலே. அரசுத்துறையிலே புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒன்று ஆரம்பிப்பதற்குரிய

1981 ஜனவரி 30]

கருத்து இருக்கின்றது. நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்துருவும் இருக்கின்றது. அதற்குப் பின்னால் வேறேதேனும் முயற்சிகள் எடுக்கப்படுமேயானால் அரசு அதை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காரைக்குடியில் பல்கலைக் கழகம்.

*வினா எண் 107—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆம். இப்பொருள் குறித்து அரசுக்கு தகுந்த பரிந்துரைகளைச் செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்ட உடன் மேல் நடவடிக்கைகள் தொடரும்.

செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரி.

*வினா எண் 108.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கல்பட்டு அரசினர் கலைக் கல்லூரியில் பி.யு.சி. படித்துத் தேறியமாணவர்களைப் பட்ட மேற்படிப்பிற்குச் சேர்க்க மறுக்கப் படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உண்மையில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவரவர்களே, கடந்த ஆண்டு செங்கற்பட்டு அரசினர் கலைக் கல்லூரியில் பி.யு.சி. படித்த மாணவர்களை பி.காம். பட்டப் படிப்புக்கும் மற்ற பட்டப் படிப்புகளுக்கும் சேர்க்க முடியாது என்று கல்லூரியின் முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மிகுந்த சிரமப்பட்டு ஒருசிலரைச் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டாவது பி.யு.சி.யில் தேறிய மாணர்வர்களுக்கும் பட்டப் படிப்பிலே குறிப்பிட்ட அளவு இடங்களை ஒதுக்கித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே இந்த ஆண்டு 68 மாணவர்கள் பி.யு.சி. வகுப்பிலே படித்தவர்கள் பட்டப் படிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தான் என்னிடத்திலே தரப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சில மாணவர்களைச் சேர்த்திருப்பதாகச் சொல்லி விட்டார்கள், பிறகு ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும்?